(சமரசம்) முன்னிலையில பேச்சுவார்த்தை நடந்தது. அவர், 29-9-1989 அன்று தொழிற் தகராறு சட்டம் 12 (4) பிரிவின் கீழ் அரசுக்கு அறிக்கை ஒன்றைக் கொடுத்தார். 1-12-1989 அன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முன் பேச்சுவார்த்தை நடந்தது. அதில் தொழிலாளர் துறை ஆணையரும் கலந்துகொண்டார். அதில் ஒரு பொதுப்படையான இசைவு ஏற்பட்டது. (அண்டர்டேக்கிங்)- அதைத் தொடர்ந்து தொழிலாளர் துறை ஆணையர் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். இந்த ஒப்பந்தப்படி, தொழிலாளர்களுக்கு ஒப்பந்தம் முடிந்தபின்னர், பணிவழங்க அந்தச் சட்டத்தில் இடம்இல்லை. இந்தப் பிரச்சினையை விரைவில் அரசு தீர்த்து வைக்க அரசு தொழிலாளர் துறை தக்க அறிவுரை வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு சி. கோவிந்தசாமி அவர்கள் திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் பற்றி இங்கே கோரிக்கை எழுபபினார்கள். அதற்கான பதிலை இந்த அவையின் முன்னால் நான் வைக்கிறேன்.

(ஆ) திருப்பூர் பனியன் தொழிலாளர் நிலை பற்றி உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே எழுப்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு திரு கே,என்.நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள மூவாயிரத்திற்கு மேற்பட்ட பனியன் தொழிற்சாலைகளில் 40 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். அவற்றில் பனியன் ஏற்றுமதி செய்யும் பல நிறுவனங்களும் அடங்கும். இந்த நிறுவனங்கள், தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம், திருப்பூர் மற்றும் திருப்பூர் எக்ஸ்போர்ட் அசோசியேஷன் என்ற அமைப்புகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. அதில் உள்ள தொழிலாளர்கள், ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எப்.பி.எப்., ஏ.டி.எம்.கே., ஐ.என்.டி.யு.சி., மற்றும் திருப்பூர் பனியன் பவர்லூம் பொதுத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, மாறுபடும் பஞ்சப்படி, வீட்டுவாடகைப்படி, மிகை நேரப்படி, பயணப்படி, பெண் தொழிலாளர்களுக்கு திருமண உதவி போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து, அனைத்துத் தொழிற் சங்கங்களும். கூட்டாகத் தொழில் தகராறு எழுப்பி, 28-3-90 முதல் பொது வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தன. கோவை தொழிற் தகராறு அலுவலர் (சமரசம்) அவர்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். பேச்சுவார்த்தையின்போது தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கமும், திருப்பூர் எக்ஸ்போர்ட் அசோசியேஷனும் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட முடியாத நிலையில், அலுவலர்கள் தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து இந்த இரண்டு நிறுவனங்களின் சங்கங்களுடனும், தொழிலாளர் சங்கங்களுடனும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். 21-3-1990 அன்று கோவை தொழிலாளர் அலுவலர்

1990 ஏப்ரல் 3] [திரு. கே.என். நேரு]

10-35 மணி

முன்பு நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையின் பயனாக திருப்பூர் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் என்ற நிர்வாகச் சங்கங்கத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி தற்போது வாங்கும் அடிப்படைச் சம்பளத்தில் பினவருமாறு ஊதிய உயர்வு வழங்க ஒப்புக்கொள்ளப் பட்டது.

1-4-1990 முதல் 31-3-1991 முடிய 20 சதவீதம் கூடுதலாகவும் 1-4-1991 முதல் 31-3-1992 முடிய 8 சதவீதம் கூடுதலாகவும் 1-4-1992 முதல் 31-3-1993 முடிய 8 சதவீதம் கூடுதலாகவும், பஸ் ரூட் தொழிலாளர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கூலியில் 1-4-1990 முதல் 20 சதவீத உயர்வும், பின்னர் அதிலிருந்து 1-4-1991 முதல் 8 சதவீத உயர்வும், பின்னர் அதிலிருந்து 1-4-1992 முதல் 1-4-1993 வரை 8 சதவீத உயர்வும் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. பஞ்சப்படியைப் பொறுத்தவரையில் 1981-ஆம் ஆண்டு விலைவாசிக்குறியீட்டு எண் 3599 என்பதன்படி மாதம் ஒன்றுக்கு 60 ரூபாயும், 3599-க்கு மேல் உள்ள ஒவ்வொரு புள்ளிக்கும் புள்ளி ஒன்றுக்கு 8 பைசா வீதம் 1-4-1990 முதல் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

மணமாகாத பெண்களுக்குப் பின்வருமாறு திருமண அலவன்ஸ் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. ஓராண்டு சர்வீஸ் முடிந்தவர்களுக்கு ரூபாய் 500 என்றும், இரண்டு ஆண்டு சர்வீஸ் முடிந்தவர்களுக்கு ரூபாய் 1000 என்றும் மூன்றாண்டுக்காலமும் அதற்கு மேலும் சர்வீஸ் முடிந்தவர்களுக்கு 1,500 ரூபாய் என்றும், முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் 1-4-1990 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும். ஒப்பந்த நகல் இப்போது இணைக்கப் பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தினால் பெருவாரியான ஏற்றுமதி நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் பயன் அடைகின்றனர்.

தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கம் மேற்கூறிய ஒப்பந்தத்தின் ஒரு கட்சியினர் அல்ல. ஆகவே இந்தச் சங்கக் கட்டுப்பாட்டில் வரும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உள்ள பிரச்சினை குறித்து கோவை தொழிலாளர் அலுவலர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற நிலைமை உள்ளது. இந்தத் தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கத்தில் சில ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும் உறுப்பினராக இருப்பதாகவும், ஆனால் பெருவாரியான உறுப்பினர்கள் பணியாற்றுவது உள்ளூர் பனியன் உற்பத்தி நிருவனங்களாக உள்ளன என்றும் அறியப்பட்டது. அந்த ஏற்றுமதி நிறுவனங்கள் மேற்சொல்லப்பட்ட திருப்பூர் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் என்ற சங்கம் செய்துள்ள ஒப்பந்தத்தில திருமண உதவித் தொகை

கோரிக்கை மற்றும் இதர பிரச்சினையில் ஒப்பந்த ஷரத்துக்களைப் பொதுவாக ஏற்றுக்கொள்ள இசைந்து இருப்பதாவும், திருமண உதவி கோரிக்கைப் பிரச்சினையில் ஒரு இணக்கம் ஏற்படாத நிலையில் தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்துவது தாமதமாகி வருகிறது எனவும் அறியப் பட்டது.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை கோவை தொழிலாளர் அலுவலர் முன்பு 5-4-1990 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வேலை நிறுத்தம் ஏற்படக்கூடிய நிலைமை தற்போது இல்லை எனறும் நிலைமை அமைதியாக உள்ளதாகவும் அறியப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு.சா.சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரெண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1990-91 விவாதமும் வாக்கெடுப்பும் — (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 17—கல்வி (தொடர்ச்சி)—

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்கு நன்றி.

பொதுவாக கல்விக்காக மிக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றாலும் கூட அந்த நிதி கிராம மக்களுக்குச் சென்று சேர்கிற வகையில் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டாகவேண்டும். கிராமப்புறங் களில் பள்ளிகள் மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றன. இங்கே கூட புகைப்படங்களை நான் வைத்திருக்கிறேன். மரத்த டியில் பள்ளிக்கூடங்கள் நடப்பது என்பது வாடிக்கையாக ஆகிவிட் டது, எந்தத் தொகுதியில் பார்த்தாலும் தொடக்கப்பள்ளிகள் பெரும்பாலும் மரத்தடியில் நடப்பதைப் பார்க்கிறோம். பள்ளி களைச் சீரமைக்க நிதி ஒதுக்கப்படுகிறது என்று முன்பே இந்த அவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, 14 விழுக்காடு நிதியை அதாவது ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதியில் 14 விழுக்காட்டை இதற்காகச் செலவிடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் குறிப்பாக எந்த ஒரு ஒன்றியத்திலும் அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.